DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 129/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | கிழவியம்மாள் (PW.7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது உச்சநேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் விறகுவெட்டும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையொப்பங்கள் எதுவும் என்னுடையது கிடையாது. எனக்கு கையொப்பம் போடத்தெரியாது, கைரேகை தான் வைக்க தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 14.08.2022ம் தேதியன்று மதியம் 1.30மணியளவில் நானும் எனது ஊரைச் சேர்ந்த கருப்பசாமி என்பவரும் வழக்கின் சம்பவ இடத்தில்

பேசிக் கொண்டிருந்தபோது கட்டனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் கருப்பசாமி என்பவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI
Calender Miscellaneous **C.C.No. 129/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | பெத்துலெட்சுமி (PW.6) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது உச்சநேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும், எனது மாமா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 13.08.2022ம் தேதியன்று இரவு 8.00மணியளவில் எனது வீட்டில் விளக்கு போட்டுவிட்டு எனது அப்பா ராக்குச்சாமி வீட்டிற்கு வந்தபோது கிழவியம்மாள் வீட்டின் அருகே எனது மாமா பால்சாமியை அழகுமலை கட்டையை வைத்து அடித்தார்கள். எதிரி பால்சாமி கம்பை வைத்து பால்சாமியை கம்பை வைத்து அடித்தார்கள். கத்தி கம்பை வைத்து மல்லிகா அடிக்க ஓங்கினார், அடித்தாரா என்று எனக்கு தெரியாது, நான் கையில் குழந்தையை வைத்திருந்ததால் நான் அங்கு சென்று பார்க்கவில்லை. எனது மாமாவின் மனைவி சின்னபொண்ணு கூட்டத்தில் பாவாடையுடன் நின்று கொண்டிருந்தார்.

தம்பி பாலமுருகனுக்கு தலையில் காயம் இருந்தது. காயம்பட்டவர்கள் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 129/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : கருப்பசாமி (PW.5)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22[th] day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது உச்சநேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 12.08.2022ம் தேதியன்று இரவு 8.00மணியளவில் நான் எனது வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எனது வீட்டின் முன்பு சத்தம் கேட்டது நான் வெளியே வந்து பார்த்தபோது பால்ச்சாமிக்கும், அழகுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்போது நானும், எனது மனைவி கிழவியம்மாளும் சண்டையை விலக்கிவிட்டோம். அதன்பிறகு காயம்பட்ட நபர்கள் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எ.த.கு.வி –**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சண்டை முடிந்தவுடன்தான் நான் சம்பவ இடத்திற்கு வந்தேனா என்றால் ஆமாம்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 129/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : பாலமுருகன் (PW.4)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது உச்சநேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும், எனது மாமா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 13.08.2022ம் தேதியன்று இரவு 8.00மணியளவில் நான் எனது மனைவி, எனது அப்பா, அம்மா ஆகியோர் வீட்டில் இருந்தோம். செந்தாமரை வீட்டுப்பக்கம் அலறல் சத்தம் கேட்டு நானும், எனது அப்பா ராக்குச்சாமி என்பவரும் சென்று பார்த்தபோது எனது அக்கா சின்னபொண்ணு குளித்து விட்டு வந்தபோது அழகர்சாமியின் மனைவி கிழவியம்மாள் எத்தி கீழே தள்ளிவிட்டு பொது மக்கள் செல்லும் பொது பாதையில் சேலையை உருகிவிட்டு எனது அக்கா கீழே கிடந்தார். எனது மாமா பால்சாமியை மல்லிகா கத்தி கம்பை வைத்து , இடது பக்க கழுத்தில் வெட்டும்போது தடுத்ததால் இடது கையில் காயம்

ஏற்பட்டது. அழகுமலை எனது மாமா பால்சாமியை கம்பை வைத்து தலையில் அடித்ததால் ரத்தம் வந்தது. அப்போது சக்கனன் மகன் பால்சாமி அருவாளுடன் வந்து எனது மாமா பால்சாமியை வெட்ட வந்தபோது எனதுஅப்பா ராக்குச்சாமி தடுத்துவிட்டார். சக்கனன் என்பவர் எனது அப்பா ராக்குச்சாமியை இடுப்பில் கருவேலங்கம்பால் அடித்தார். நானும் எனது அப்பா ராக்குச்சாமியும் சண்டையை விலக்கிவிட்டபோது என்னை கிழவியம்மாள் கம்பால் தலையில் அடித்தார். அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டு 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு நானும், எனது மாமா பால்சாமி, சின்னபொண்ணு ஆகியோர் சிகிச்சையில் சேர்ந்தோம். மறுநாள் கட்டனூர் காவல் நிலையத்தில் இருந்து போலிசார் வந்து விசாரித்தபோது எனது மாமா பால்சாமி புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.